செய்தி வெளியீடு எண்: 521

நாள்: 20.10.15

## பங்களிப்பு ஓய்வூதிய திட்டம்

தமிழகத்தில் 2003 ஏப்ரல் முதல் அரசு பணியில் சேர்ந்தவர்களுக்கு, புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் அறிமுகமானது. இதில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் உட்பட நான்கு லட்சத்து இருபது ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சேர்க்கப்பட்டு உள்ளனர். இத்திட்டத்தில் அடிப்படை ஊதியம், தர ஊதியம் மற்றும் அகவிலைப்படிக்கு பிரதி மாதம் 10 சதவீதம் பிடிக்கப்படும். அதே அளவு தொகையை, அரசும் தன் பங்காக செலுத்தும். அரசு பங்குத் தொகைக்கும் பணியாளரின் பங்கு தொகைக்கும் சேர்த்து வட்டி கணக்கிட்டு தனியரின் கணக்கில் சேர்க்கப்பட்டு வருகிறது.

விடுபட்ட 21,70,464 வரவு (Missing Credit) நேர்வுகளும், கருவூல கணக்குத் துறையால் வரவு விவரங்கள் சரிபார்க்கப்பட்டு உரிய அரசுப் பணியாளர்களின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளன. இவ்விவரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டு 2014–15ம் ஆண்டிற்கான கணக்குத்தாட்கள் (Accounts Slips) இத்திட்டத்திலுள்ள அரசு பணியாளர்களுக்கும் மற்றும் அரசு நிதியுதவி (Aided Institutions) பெறும் நிறுவனப் பணியாளர்களுக்கும் வழங்க தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு 2014–2015ம் ஆண்டு வரையான கணக்குத்தாட்கள் (Account Slip) இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதில் விடுதல் ஏதேனும் இருந்தாலும், குறைகள் இருப்பினும் சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர் அல்லது மாவட்ட கருவூல அலுவலரை அணுகி குறைகளை நிவர்த்தி செய்து கொள்ள அரசு அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அரசு ஊழியர்கள் மற்றும் அரசு நிதியுதவிபெறும் நிறுவனப் பணியாளர்களுக்கான 2014–15ம் ஆண்டுக்கான கணக்குத்தாட்களை கீழ்காணும் வலைதள முகவரி: URL- http://218.248.44.123/auto_cps/public என்ற முகவரியில் அவரவர் கணக்குத்தாட்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கருவூலக் கணக்கு இயக்குநருக்காக

20.10.15

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை
சென்னை-9